# தி.மு.க. வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நாள் - 'ஜனவரி 4'



ஜனவரி 4ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றிலும்....

தலைவர் தளபதியார் அவர்களின் அரசியல் வரலாற்றிலும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய முக்கியமான நாள்.

ஆம்... ஆறு ஆண்டுகள் முன்பாக... அதாவது 2017 ஜனவரி நான்காம் நாள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.கழகப் பொதுக் குழுவில்....

தி.மு.கழகத்தின் விதி எண் 18இல் திருத்தம் கொண்டு வரப்பட்டு....

தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் கழகத்தின் செயல் தலைவராக பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த உன்னதமான நாள், ஜனவரி 4.

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு தி.மு.க. கோபாலபுரம் இளைஞர் அமைப்பு துவங்கி... திராவிட இயக்க மேடை நாடகங்கள்... மிசாவின் ஓராண்டு கடுங்காவல் சிறைத்தண்டனை... இளைஞரணியின் ஐந்து பொறுப்பாளர்களில் ஒருவர்... இளைஞரணிச் செயலாளர்.... எம்.எல்.ஏ... மேயர், எம்.எல்.ஏ... அமைச்சர்... துணை முதல்வர்.... கழகப் பொருளாளர்....

என்ற படிகளை எல்லாம்... ஓராண்டு ஈராண்டு... டெகேட் எனப்படும் பத்தாண்டுகள் என்றெல்லாம் இல்லாமல்....

ஐம்பது ஆண்டுகள் தொடர் ஓட்டத்தின் மூலம்... தமிழ்நாட்டின், மூலை முடுக்குகள்... இண்டு இடுக்குகள் என்று அத்தனை இடங்களிலும் தன் கால் தடங்கள் படாத இடங்களே இல்லை என்ற நிலையில் கழகக் கொடியை ஏந்தி... கழகக் கொடிகளை பல்லாயிரக்கணக்கில் ஏற்றி.... ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான கழகப் பொதுக் கூட்டங்களில் பேசிப் பேசி...

இளைஞர்களிடையே உரையாடி உரையாடி.... உறவாடி, நட்பாகி, அண்ணனாகி.... கழகத்தை கலைஞருக்காக தன் தோள்களில் சுமந்து கொண்டு....

மீண்டும் சொல்கிறேன்... ஓராண்டு ஈராண்டல்ல... ஐம்பது ஆண்டுகள் உழைத்து உழைத்து உழைத்தே.... ஓடாகிப் போய்... தனது அறுபத்தி ஐந்தாவது வயதில் அவருக்கு கழகப் பொதுக்குழுவால்...

கழகத்தை இனி தோள்களில் அல்ல.... உன் தலைமேல் தூக்கி சுமந்து ஓடு ஓடு.... இழந்த வெற்றிகளையெல்லாம் ஈட்டிக் கொடு என்ற கட்டளையோடு, அவருக்கு அளிக்கப்பட்ட செயல் தலைவர் பொறுப்பு...!

கழகத்தின் உயிர்நாடியாம்... பொதுக்குழுவின் கட்டளைகளை ஏற்று...

அடலேறுகளை பந்தயத்தில் ஓட விட்டு....

அடுத்த ஓராண்டில் அவர் கழகத் தலைவராக பொறுப்பேற்ற நிலையில்...

நடந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் தான், கழக வரலாற்றில் முதல் முறையாக 53 சதவிகித வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி கிடைத்தது...

கிராம ஊராட்சித் தேர்தல்களிலேயே கூட கழகம் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் பொழுது முதன் முறையாக 55 சதவிகித இடங்களை வென்றது...

சட்டமன்றப் பொதுத்தேர்தலில் கால் நூற்றாண்டுக்குப் பிறகு மூன்று இலக்க தி.மு.கழக எம்.எல்.ஏ.க்களைப் பெற்று கழகம் ஆட்சிக்கட்டிலில் மீண்டும் அமர்ந்தது...

நகர்ப்புற உள்ளாட்சியில் 95 சதவிகித வெற்றிகளைப் பெற்றது...

இதோ இன்றைக்கும் தமிழக அரசியல் வரலாற்றில் "ஸ்டாலின் Vs Others" என்ற மிக மிக உச்சபட்ச அரசியல் ஆளுமைக்கான நிலையை அடைந்து...

இன்றைக்கு கழகத்தை மக்கள் மன்றத்தின் உச்சத்தில் கொண்டு போய் வைத்திருக்கின்றார்..!

அவர் கட்டமைத்த கூட்டணி... அவரோடு கட்டுண்டு நிற்கின்றது...!



**சௌமியன் வைத்தியநாதன்**
திராவிட இயக்க எழுத்தாளர்

இரண்டரை ஆண்டு கால ஆட்சியில்.... ஒட்டுமொத்த தமிழ்நாட்டு கிராமப்புற மக்களும், பெண்களும், ஒடுக்கப்பட்ட, அடித்தட்டு மக்களும் அவர்தான் தங்கள் காப்பாளர் என்று அவரது கரங்களை இறுகப் பற்றி நடந்து செல்கின்றனர்...!

இதோ நாளைக்கே... தமிழ்நாட்டில் எந்தத் தேர்தல் வந்தாலும், அவர் தமிழ்நாட்டின் ஐம்பது சதவிகிதத்திற்கும் மேலான மக்கள் ஆதரவோடு வெற்றி பெறுவார்...!

அவருக்குப் பணம் தேவையில்லை... புகழ் தேவையில்லை... பெரிய மனிதர்களின் உபசாரங்களும், அங்கீகாரங்களும் தேவையில்லை....

ஒடுக்கப்பட்ட.... ஒதுக்கப்பட்ட... உரிமைகள் மறுக்கப்பட்ட.... ஏற்றம்பெற வழியில்லாத... அடித்தட்டு மக்களின் வெற்றிக் கூக்குரல்களும் மகிழ்ச்சி ஆரவாரங்களும், கொண்டாட்டங்களும் மட்டுமே அவருக்குத் தேவை...!

அதற்காகவே அவர் உழைத்துக் கொண்டிருக்கின்றார்... அவர்களும் அதைப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள்..!

**வாழ்த்துக்கள் தலைவரே...**
**எங்களின் தளபதியாரே...!**



மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட புதுப்பட்டி ஊராட்சி, நெற்களம் கிராம பகுதியில் நடைபெற்ற 'மக்களுடன் முதல்வர்' சிறப்பு முகாமில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார். உடன், மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சித் தலைவர் சூரியகலா கலாநிதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் மணிமேகலை, மாவட்ட கவுன்சிலர்கள் நேருபாண்டியன், வடிவேல்முருகன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், ஊராட்சிமன்ற தலைவர்கள் செல்விசேகர், முருகேஸ்வரி சரவணன், கழக நிர்வாகிகள் மதிவாணன், போஸ், அன்பு உட்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் வரும் நாட்களில்

# கனமழை: அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஜன.7 -

தமிழ்நாட்டில் கனமழை முதல் மிக கனமழை எச்சரிக்கை குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமசந்திரன் அறிக்கை வருமாறு:

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் வளிமண்டல சுழற்சி நிலவுவதால் தமிழ்நாட்டில் கனமழை முதல் மிக கனமழைப் பொழிவு ஏற்படும் என இந்திய வானிலை ஆய்வு மையம் நேற்று முன்தினம் (05.01.2024) பிற்பகல் 12.30 மணிக்கு வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கனமழை எச்சரிக்கை - மாவட்டங்கள் வருமாறு

07.01.2024: கனமழை முதல் மிக கனமழை - கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

கனமழை - மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

08.01.2024 : திருவள்ளூர் மாவட்டத்தில் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

07.01.2024 அன்று சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும் ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.



கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், மீனவர்களுக்கு பின்வருமாறு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது:-

தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை அடுத்துள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 40-50 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.

எனவே, மீனவர்கள் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மீன் பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும், மேற்சொன்ன பகுதிகளுக்கு மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### பொங்கல் பரிசுத் தொகுப்புடன்

# ரூ.1000 வருகிற 10 ஆம் தேதி முதல் விநியோகம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன. 7 -

தமிழர்களின் அடையாளமாக அனைத்துத் தரப்பு மக்களாலும் பொங்கல் பண்டிகை ஆண்டுதோறும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது.

இந்த நன்னாள் அனைத்துத் தொழில்களுக்கும், ஏன், மனித குலத்திற்கே அடித்தளமாய் விளங்கி, உணவளித்து வரும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளாகவும் தமிழர்களாகிய அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

பொங்கல் திருநாளை பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவற்றுடன் ஆயிரம் ரூபாய் ரொக்கம் பொங்கல் பரிசு தொகுப்பாக வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த பொங்கல் பரிசு தொகுப்பு நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட உள்ளது.

இந்த பொங்கல் பரிசு தொகுப்பிற்கான டோக்கன் நாளைமுதல் விநியோகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொங்கல் பரிசுத் தொகுப்பு வருகிற 10 ஆம் தேதி முதல் விநியோகம் செய்யப்படும் என்றும், 13 ஆம் தேதிக்குள் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

### கோவை தெற்கு மாவட்டம்

# ஆனைமலை வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை தெற்கு மாவட்டம், ஆனைமலை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் பி.கன்னிமுத்து அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, திரு. **எஸ்.எஸ்.யுவராஜ்** (எண்.3/54, மெயின் ரோடு, சுப்பேகவுண்டன்புதூர், ஆனைமலை, கோவை மாவட்டம்-642 103.) அவர்கள் ஆனைமலை வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 05.01.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



நேற்று (06.01.2024) சென்னை தீவுத்திடலில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவையொட்டி விழா முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா.காந்தி, கலை பண்பாட்டுத் துறை இணை இயக்குநர் திருமதி சிவசௌந்திரவல்லி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொதுமேலாளர் திருமதி இ.கமலா ஆகியோர் உள்ளனர்.

### இந்தியாவில் தொழில் புரிவதற்கு சிறந்த மாநிலமாக தமிழ்நாடு!

# 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயரும் நாள் வெகு தொலைவில் இல்லை!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 7-

இந்தியாவில் தொழில் புரிவதற்கு சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. இந்த வரிசையில் அடுத்த மணிமகுடமாக, தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயரும் நாள் வெகு தொலைவில் இல்லையென 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தலைநகர் சென்னையில் வரும் 7 மற்றும் 8ம் தேதிகளில் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.5.5 லட்சம் கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழ்நாட்டை 2030ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கான இலக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்ணயித்துள்ளார். அதன் அடிப்படையில், தொழில் துறையில் பல்வேறு பிரிவுகளில் முதலீடு களை ஈர்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த 2 ஆண்டுகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஐக்கிய அரபு நாடுகளுக்கும் அதன்பின் சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கும் சென்று பல ஆயிரம் கோடி மதிப்பிலான முதலீடுகளுக்கு ஒப்பந்தம் மேற்கொண்டார்.



தினகரன்
ஜனவரி 6, 2024 சனிக்கிழமை

இலக்கை எட்டுவோம்

தலைநகர் சென்னையில் வரும் 7 மற்றும் 8ம் தேதிகளில் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.5.5 லட்சம் கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழ்நாட்டை 2030-ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கான இலக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்ணயித்துள்ளார். அதன் அடிப்படையில், தொழில்துறையில் பல்வேறு பிரிவுகளில் முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த 2 ஆண்டுகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஐக்கிய அரபு நாடுகளுக்கும் அதன்பின் சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கும் சென்று பல ஆயிரம் கோடி மதிப்பிலான முதலீடுகளுக்கு ஒப்பந்தம் மேற்கொண்டார். இதன் தொடர்ச்சியாக, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்

இதன் தொடர்ச்சியாக, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இரண்டு நாட்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளது. தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை, உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடு களை ஈர்ப்பது மட்டுமல்லாமல், பெருமளவில் வேலை வாய்ப்பு அளித்திடும் தொழில் முதலீடுகளையும் ஈர்த்திட முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

இதன் பலனாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை 4,15,282 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,97,196 கோடி மதிப்பிலான 241 முதலீடுகள் உறுதிசெய்யப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக நடத்தப்படும் இம்மாநாட்டில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பெறப்பட்ட முதலீடுகளை மிஞ்சும் வகையில் முதலீடுகளை பெற திட்டமிடப்பட்டுள்ளது. சி.ஐ.ஐ. உள்ளிட்ட அமைப்புகளுடன் இணைந்து நடத்தப்படும் இம்மாநாட்டுக்காக அதிநவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், தைவான் உள்பட உலகின் பல நாடுகளின் முன்னணி நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன. தொழில்துறை, ஆட்டோமொபைல், எரிசக்தி துறை, தகவல் தொழில்நுட்ப துறை உள்ளிட்ட துறைகளில் அதிக முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளன. குறிப்பாக, படித்த இளைஞர்களுக்கு உயர்தர வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பது கண்கூடாக தெரிகிறது. தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன துறையின் வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தி வருகிறது. இத்துறையின் வளர்ச்சிக்கு இம்மாநாடு பெரிதும் உதவும் என்பதில் சந்தேகம் இல்லை.

கடந்த 2 ஆண்டுகளில், தொழில் வளர்ச்சியிலும், பொருளாதாரத்திலும் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. சமீபத்தில், நிதி ஆயோக் வெளியிட்ட ஏற்றுமதி தயார்நிலை குறியீடு தரவரிசைகளின்படி, 80.89 புள்ளிகளுடன் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தை பெற்றுள்ளது. மின்னணுவியல் ஏற்றுமதியிலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் மற்றும் பணியாளர்களை கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில், அகில இந்திய அளவில் 2வது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு ஒன்றிய அரசு வெளியிட்ட அறிக்கையின்படி, இந்தியாவில் தொழில் புரிவதற்கு சிறந்த மாநிலங்களில் ஒன்றாகவும் தமிழ்நாடு விளங்கி வருகிறது. இந்த வரிசையில், அடுத்த மணிமகுடமாக, தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயரும் நாள் வெகுதொலைவில் இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.